*(வலைப்பின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# *1999 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம்*

---

*(1999, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, செத்தெம்பர் மாதம் 03 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா *4.00***

**தபாற் செலவு : ரூபா *3.50***

**1999 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க முத்திரை தீர்வை (திருத்தச்) சட்டம்**

[1999, ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.– ஓ. 66/98

**1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** 1996 ஆம் ஆண்டின் 38 இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும், (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (24) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :–

"(24) கடன் பிணைப்பொறுப்பு அல்லது கடன் பிணைப் பொறுப்பொன்றை விற்பதற்காக அல்லது கைமாற்றுவதற்காக எழுதி நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனம் ; அத்துடன்

(2) அப்பிரிவின்முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :–

"(27) எவரேனும் முதனிலை விற்பனையாளருடன் செய்து கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்கள் அல்லது அரசாங்கப் பிணைப்பொறுப்புக்கள் தொடர்பான மீள்கொள்வனவு உடன் படிக்கை.".

H-022545

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவை திருத்துதல்.*

**3.** ஆயிரத்து தொளாயிரத்துத் தொண்ணூற்றாறாம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு,"அற்றோணித் தத்துவம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

> ' "முதனிலை விற்பனையாளர்" என்பது, திறைசேரி உண்டியல்களை அல்லது பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்களைக் கையாளும் நோக்கத்துக்காக முதனிலை விற்பனை யாளரொருவராக இருக்கவென உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள்கட்டளைச்சட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியின் பணச் சபையினால் நியமிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, கம்பனி அல்லது வேறு ஆள் எனப் பொருள்படும். '.

*கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.*

**4.** இச்சட்டத்தின் முறையே 2 ஆம் பிரிவினாலும் 3 ஆம் பிரிவினாலும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவுக்கும் 71 ஆம் பிரிவுக்கும் செய்யப்பட்ட திருத்தங்கள், 1998 நவெம்பர் 6 ஆம் திகததியன்று வலுவுக்கு வந்துவிட்டனவாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*